# குழந்தை நாடகம்

## காட்சி-1

[தெருத் திண்ணையில் முத்துப்பையன் உட்கார்ந் திருக்கிறான். சுட்ட பனங்கிழங்கு விற்றுக் கொண்டு போகிறாள் ஒருத்தி. முத்துக்கு வாய் ஊறிப் போகிறது.]

முத்து: பனங்கிழங்கு!

[அவள் அவனெதிரில்—திண்ணையில் பனங்கிழங் கின் கூடையை வைக்கிறாள்.]

முத்து: கட்டு என்ன விலை?

அவள்: அரையணா!

முத்து: சரி, கொடுத்துவிட்டுப்போ. காசு பிறகு வந்து வாங்கிக்கொள்.

அவள்: முடியாது. முதலில் காசை வை.

முத்து: அப்படியானால் இரு. (முத்து வீட்டுக்குள் ஓடுகிறான்.]

## காட்சி—2

[முத்துப் பையனின் தாத்தா சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டிருக்கிறார் கூடத்தில்]

முத்து: தாத்தா! ஒரு புதுவேலை: அரையணா—ஒரே நாணயமாய் இருக்க வேண்டும். இரண்டு காலணா வேண் டாம் எடுங்க.

தாத்தா: (அண்டையில் முக்காலியிலிருந்த பையில் தேடி அரையணா நாணயத்தைக் கொடுத்து) என்ன புது வேலை? காட்டு!(முத்து அரையணாவை வாங்கிக் கொண்டு தெருவில் ஓடிப் பனங்கிழங்கு வாங்கி உரித்துத் திண்ணை யில் உட்கார்ந்தபடி ஒடித்து ஒடித்து மென்று விழுங்கிக் கொண்டிருக்கிறான்.]

## காட்சி—3

[தாத்தா மெதுவாகத் தெருவில் வந்து முத்துப் பையனைப் பார்க்கிறார்.]

தாத்தா: புதுவேலை என்றாயே! காட்டவில்லையே!

முத்து: புதுவேலை காட்டிக் கொண்டுதான் இருக்கிறேன். நீங்கள் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறீர்கள்.

தாத்தா: என்ன?

முத்து: புதுவேலை என்று உங்களிடம் அரையணாவை வாங்கி வந்து பனங்கிழங்கு வாங்கினேனே. அது புது வேலைதானே தாத்தா.

தாத்தா: நீ சொல்வது மெய்.

முத்து; (தின்று கொண்டிருக்கிறான்.)

**காட்சி–4**

தாத்தா: தம்பி, கிழங்கு நடுவில் இருக்கும் நாகப் பூச்சியை எடுத்துக் கொடுக்கிறேனே.

[பையன் மீதியுள்ள இரண்டு கிழங்குகளைக் கொடுக்கிறான்.]

தாத்தா: (இரண்டு கிழங்குகளையும் பிளந்து நடுவிலுள்ள நாகப் பூச்சி இரண்டையும் எடுத்துப் பையனிடம் நீட்டி) இந்தா தம்பி.

[மீதி கிழங்குகளையெல்லாம் தம் மடியில் வைத்துக் கட்டுகிறார்.)

முத்து: என்ன?

தாத்தா: பின்னென்ன? நாகப்பூச்சியைத் தானே எடுத்துத் தருவதாகச் சொன்னேன்.

முத்து: சரி, சரி! எனக்கு இனிமேல் வேண்டியது இல்லை. நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்.

[தாத்தா உள்ளே போகிறார். பையனும் தொடர்கிறான்.]

**காட்சி–5**

முத்து: வெற்றிலைப் பாக்கு உரலில் இடித்துத் தரட்டுமா, தாத்தா? உங்களுக்குப் பல்லில்லையே!

தாத்தா: ஆம் அப்பா!

[கொடுக்கிறார். பையன் இரு கிழங்கையும் இடித்து ஒரேயடியாய் வாயில் போட்டுக் கொண்டு உரலைத் தாத்தாவிடம் நீட்டுகிறான்.]

தாத்தா: இடித்துத் தருவதாகச் சொன்னாயே!

முத்து: உரலைத்தான் சொன்னேன்.

குயில், புதுவை 15.5.48